# கல்லீரல்-பித்தப்பை-கணைய நவீன சிகிச்சை மையம்

## மியாட் மருத்துவமனையில் தொடக்கம்

சென்னை, மார்ச் 1: கல்லீரல், பித்தப்பை, கணைய நோய்களைக் குணப்படுத்தும் நவீன சிகிச்சை மையம் சென்னை மியாட் மருத்துவமனையில் சனிக்கிழமை முறைப்படி தொடங்கப்பட்டுள்ளது.

தொடக்க விழா நிகழ்ச்சியில் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், கல்லீரல்-பித்தப்பை-கணைய சிகிச்சை துறையின் தலைவர் டாக்டர் ஆர்.சுரேந்திரன் ஆகியோர் கூறியதாவது:

"உடல் உறுப்புகளில்' ஜீரண உறுப்புகளான கல்லீரல்-பித்தப்பை-கணையம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவற்றில் பாதிப்பு ஏற்படும் நிலையில் 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை உரிய சிகிச்சை இல்லாமல் ஏராளமானோர் இறக்கும் நிலை ஏற்பட்டு வந்தது.

குறிப்பாக முன்பெல்லாம் ஒருவருக்கு கணைய பாதிப்பு ஏற்பட்டால், அதற்கு சிகிச்சை அளித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் டாக்டர்களிடையே இருந்தது.



ஜீரண உறுப்புகளின் பாதிப்பைக் கண்டறிய உதவும் 'இஆர்சிபி' கருவியுடன் (இடமிருந்து) டாக்டர் ஆர்.சுரேந்திரன், டாக்டர் பிருத்வி மோகன்தாஸ். (உள் படம்) கல்லீரல் மாற்று சிகிச்சை மற்றும் கணைய சிகிச்சை மூலம் பலன் அடைந்தவர்கள்.

ஆனால் மருத்துவ அறிவியல் முன்னேற்றம்-நவீன மருத்துவக் கருவிகளின் வசதி காரணமாக கல்லீரல் மாற்று சிகிச்சை, கணைய அழற்சிக்கு நவீன சிகிச்சை அளித்தல் ஆகியவை இப்போது சாத்தியமாகியுள்ளது. மியாட் மருத்துவமனையில் கல்லீரல்-பித்தப்பை-கணைய சிகிச்சை மையத்தில் இதுவரை 22 பேருக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. உலக அளவில் கல்லீரல்-கணைய பாதிப்புக்குள்ளோவேருக்கு சிகிச்சை அளிக்கப்படும் நிலையில் இறப்பு விகிதம் 5 முதல் 8 சதவீதமாக உள்ளது; ஆனால் மியாட் மருத்துவமனையில் இறப்பு விகிதம் அறவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு கல்லீரல் சிகிச்சை துறை மட்டுமின்றி, சிகிச்சையின்போது பல்வேறு மருத்துவத் துறைகளின் முழுமையான ஒருங்கிணைப்பும் மற்றும் ஒத்துழைப்புமே காரணம்.

**மதுப் பழக்கம் காரணமாக...:** கணைய அழற்சி பாதிப்புக்குள்ளாவோரில் 60 சதவீதம் பேருக்கு குடிப்பழக்கம் உள்ளதைப் பார்க்க முடிகிறது. இதேபோன்று ஹெபடைடிஸ் வைரஸ் தாக்குதல், உடல் உழைப்பில்லாமல் கல்லீரலில் கொழுப்புச் சத்து சேருதல் உள்ளிட்டவை காரணமாக கல்லீரல் பாதிப்பு ஏற்படுகிறது. முதுகு வலி, அதிக உடல் சோர்வு ஏற்படுதல் ஆகியவை கல்லீரல்-கணைய பாதிப்பின் முக்கிய அறிகுறிகளாகும்.

எனவே ஆண்டுதோறும் உடல் மருத்துவப் பரிசோதனையைச் செய்துகொண்டு கல்லீரல்-பித்தப்பை-கணையம் ஆகியவற்றின் பாதிப்பை முன்கூட்டியே கண்டறிந்து நோயின் தீவிரத்தைத் தடுத்துக் கொள்வதே சிறந்தது' என்று அவர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக கல்லீரல்-கணைய பாதிப்புக்குள்ளாகி மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று முழுமையாக குணம் அடைந்தவர்கள், தங்களது நோய் பாதிப்பை விளக்கினர். இந்த நிகழ்ச்சியில் மியாட் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி, பத்திரிகையாளர் என்.ராம், அவரது மனைவி மரியம் ராம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.